செ.வெ.எண். 54/அக்டோபர் தேதி : 25.10.2016

# தருமபுரி மாவட்டம்

## தருமபுரி மாவட்டத்தில் கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் 11-வது சுற்றில் இலவச தடுப்பூசி முகாமில் 3,59,100 பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது — அனைத்து துறை அலுவலர்களுக்கான கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!



தருமபுரி மாவட்டம், ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் அனைத்துத்துறை அலுவலர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

கால்நடைகளில் கால் மற்றும் வாய் நோய் வைரஸ் கிருமிகளால் ஏற்படும் தொற்று நோயாகும். இது கிராம வழக்கில் கோமாரி நோய் என்று அழைக்கப்படும். இது அதிகமாக பிளவுபட்ட குளம்புகளை கொண்ட கால்நடைகளை தாக்கும். இந்நோய் கொண்ட கால்நடைகளில் அதிகமாக காய்ச்சல் வாய் மற்றும் ஈறுகளில் புண்கள், உமிழ்நீர் அதிக அளவில் சுரத்தல் கால் குளம்புகளுக்கு இடையே புண்கள், தீவனம் சரிவர உட்கொள்ளாமை போன்ற அறிகுறிகள் இருக்கும். நோய் வாய்ப்பட்ட பசு மற்றும் எருமைகளில் பாலினை குடிக்கும் இளம் கன்றுகள் திடீரென இறக்கும். இந்நோய் கால்நடை வளர்ப்போரிடையே பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும்.

இதனை தடுப்பதற்காக நாடு முழுவதும் ஆறு மாதத்திற்கு ஒரு முறை கோமாரி நோய் தடுப்பூசி தேசிய கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் பசு மற்றும் எருமைகளுக்கு இலவசமாக போடப்பட்டு வருகிறது. தற்பொழுது தருமபுரி மாவட்டத்தில் கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் 11-வது சுற்றில் இலவச தடுப்பூசி முகாம் 01.09.2016 அன்று முதல் செயல்படுத்தப்பட்டது. இந்த இலவச சிறப்பு முகாமிற்காக மாவட்டத்தில் 114 குழுக்கள் அமைக்கப்பட்டு தருமபுரி மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமங்களிலும், பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி இலவசமாக போடப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் 11-வது சுற்றில் இலவச தடுப்பூசி முகாமில் 3,59,100 பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) திரு.

பஷீர், கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.